பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

18 08 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக மகாராஷ்டிரா ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நீரிழிவு, உடல் பருமன் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பாரம்பரிய முறைகளுடன் நவீன மருத்துவத்தையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை 100 சதவீதமாக உயர்த்த மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- பெரு பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Deep Ranjan Bisoyee - Manoj Sarkar இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக மகாராஷ்டிரா ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் போட்டியிடுவார் என்று பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா அறிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பிஜேபி உயர்நிலைக் குழுக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த முடிவிற்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருப்பதாக கூறினார்.

மேலும் குடியரசு துணைத்தரைவரை போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்க பிஜேபி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

குடியரசு துணைத்தரைவராக பதவி வகித்த திரு. ஜக்தீப் தங்கர் உடல்நிலை காரணமாக பதவி விலகியதை அடுத்து அப்பதவிக்கு அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

இத்தேர்தலுக்கான மனுதாக்கல் செய்ய வரும் 21ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், அவரது அர்ப்பணிப்பு, பணிவு மற்றும் அறிவுத்திறனால் பொதுவாழ்வில் தம்மை வேறுபடுத்திக் காட்டியவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தரைவராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அனைவருக்கும் ஊக்கமளிப்பார் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், பல்வேறு மாநிலங்களின் ஆளுநராகவும் அரசியலமைப்புக் கடமைகளை திறம்பட நிறைவேற்றிய திரு. சி.பி. ராதாகிருஷ்ணனின் பரந்த அனுபவமும், ஞானமும் மாநிலங்களவையின் கௌரவத்தை உயர்த்தும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், குடியரசு துணைத்தலைவராக

பொறுப்பேற்று அவரது மேன்மையான பணிகளை தொடர வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக தம்மை தேர்வு செய்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்களுக்கு திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை அடுத்து அவரது சொந்த ஊரான திருப்பூரில் பிஜேபி தொண்டர்கள் இனிப்பு வழங்கி மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொண்டனர்.

தமது மகனை குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக தேர்வு செய்த பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களுக்கு திரு. சி.பி. ராதாகிருஷ்ணனின் தாயார் திருமதி ஜானகி அம்மாள் நன்றி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நீரிழிவு மற்றும் உடல் பருமன் பிரச்சினைகளுக்கு நவீன மருத்துவத்தையும், பாரம்பரிய முறைகளையும் ஒருங்கிணைத்து முழுமையான தீர்வுகாண வேண்டும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசிய அவர், இந்தியாவில் உடல் பருமன் மற்றும் அதனுடன் தொடர்புடைய வளர்ச்சிதை மாற்றக் கோளாறுகள் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவு முறை, உணவின் தரம், உட்கொள்ள வேண்டிய அளவு குறித்து அறிவியல்பூர்வமான அணுகுமுறை தேவை என்று குறிப்பிட்ட திரு. ஜிதேந்திர சிங், யோகா பயிற்சியின் மூலம் நீரிழிவு நோயை 40 சதவீதம் வரை குறைக்க முடியும் என்று ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் கூறினார்.

<<<<>>>>

விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாக இஸ்ரோ முன்னாள் இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சந்திரயான்-4 ஆளில்லா விண்கலமாக அனுப்பப்படும் என்றார்.

அறிவியல் துறையில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் தனியார்துறை ஒத்துழைப்பும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை 100 சதவீதமாக உயர்த்த மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை வழங்கிப் பேசிய அவர், நாட்டிலேயே தமிழகத்தில்தான் பள்ளிப் படிப்பை முடிக்கும் 75 சதவீத மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதாக கூறினார்.

மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியிலும் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ள ஏதுவாக மதுரை, கோவை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தின் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கோவை மாவட்டங்களிலும் இன்று மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கோவை மாவட்டத்தில் பெய்யும் தொடர் மழை காரணமாக வால்பாறை அருகேயுள்ள சோலையாறு அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இதையடுத்து அந்த அணையில் இருந்து மூவாயிரம் கன அடி அளவிற்கு உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம் ஆழியாறு அணைகளும் நிரம்பியுள்ளன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் இன்று நடத்தவுள்ள பேச்சுவார்த்தையில் இங்கிலாந்து பிரதமர், நேட்டோ அமைப்பின் தலைமைச் செயலாளர் உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

சீன வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Wang Yi இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி காத்மாண்டுவில் நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Arzu Rana Deuba-வை சந்தித்துப் பேசியுள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் சோலாப்பூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கான இணையதள முன்பதிவுத் தேதி வரும் 20ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆவணி மாதப் பிறப்பை முன்னிட்டு திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலில் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

<<<<>>>>

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு கரூர் பண்டரிநாதன் கோயிலில் உரியடி மற்றும் வழுக்கு மரம் ஏறும் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கண்ணனூரில் சுற்றித் திரியும் காட்டு யானை உள்ளிட்ட வன விலங்குகளை வனப்பகுதிக்குள் அனுப்ப வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தில் இயக்கப்படும் 21 ரயில்கள் வரும் 18ஆம் தேதி முதல் கூடுதலாக 38 இடங்களில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பெரு பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Deep Ranjan Bisoyee - Manoj Sarkar இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 22-20, 21-11 என்ற செட் கணக்கில் போர்ச்சுகலின் Daniel - பிரான்சின் Thomas இணையை வென்றது.

<<<<>>>>

கானா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

ACCRA-வில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் Aalisha Naik-ம், ஆடவர் இரட்டையர் பிரிவில் Abinash - Ayush இணையும் இப்பதக்கங்களைக் கைப்பற்றினர்.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ரித்விக் இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

<<<<>>>>

சுவிட்சர்லாந்தில் நடைபெற உள்ள டைமன் லீக் ஈட்டி எறிதல் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்க இந்தியாவின் Neeraj Chopra தகுதி பெற்றுள்ளார்.

தரவரிசைப் பட்டியலில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் நேரடியாக இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 4 தங்கம், 5 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

Divyanshi Bhouwmick 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவிலும், கலப்பு இரட்டையர் பிரிவிலும் 2 தங்கப் பதக்கங்களை வென்றார்.

15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் Ananya-வும், 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் Harkunwar-ம் தங்கப்ப தக்கம் வென்றனர்.

Ankolika, Vaishnavi, Kushal மற்றும் Abinandh - Ananya இணையும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

Sidhant, Ananya, Abinanth, Vaishnavi, Shriya ஆகியோர் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

<<<<>>>>